## 1. கொஞ்ச நேரம் இயேசுவே

கொஞ்ச நேரம் இயேசுவே
என்னோடு பேசும் ஆசையாய் இருக்கிறேன் – (2)
உம்மோடு பேசிட ஆச
உம் குரல் கேட்டிட ஆச – (2)
– கொஞ்ச நேரம்
பேசும் பேசும் – இயேசப்பா என்னோடு பேசும் – (2)

உம் அருகினில் நான் அமர்ந்து
என் வேதனை சொல்லிட ஆச (2)
உம்மோடு நான் நடந்து
உம்மைப் போல் மாறிட ஆச (2)
ஆச.......ஆச.....ஆச.....
– கொஞ்ச நேரம்
தாவீதை போல நானும்
பாடியே துதித்திட ஆச (2)
உம் இதயதிற்கேற்றவனாய்
உம்மிடம் பெயர் வாங்க ஆச (2)
ஆச.......ஆச.......ஆச.....
– கொஞ்ச நேரம்
தானியேல் போல நானும்
மூவேளை ஜெபித்திட ஆச – (2)
தீர்மானம் எடுத்தாலும்
அதில் உறுதியாய் இருந்திட ஆச – (2)
ஆச.......ஆச.......ஆச.....
– கொஞ்ச நேரம்

## 2. இயேசுவின் நாமத்தை உயர்த்துவோம்

இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
இகமதில் நம்மை காத்ததினால் (2)
அல்லேலுயா துதி அல்லேலுயா –(4) – இயேசுவின்

இரட்சிப்பை அளித்திடும் நாமம்
இரட்சகர் இயேசுவின் இரட்சண்ய நாமம் – (2)
பாவங்கள் போக்கி சாபங்கள் மாற்றி
பரிசுத்தமாக்கிடும் பரமனின் நாமம் – (2) – இயேசுவின்

கேட்பதை கொடுத்திடும் நாமம்
கேட்பதற்கதிகமாய் செய்திடும் நாமம் – (2)
மனநிறைவோடு மகழ்வுடன் வாழ
மகிழ்ச்சியாய் நம்மை மாற்றிடும் நாமம் – (2) – இயேசுவின்

நோய்களை நீக்கிடும் நாமம்
பேய்களை துரத்திடும் பெரியவர் நாமம் – (2)
ஆகிலம் எங்கிலும் அவர் புகழ் பாடி
அன்பாய் காத்திடும் அன்பரின் நாமம் – (2) – இயேசுவின்

GOD'S LOVE MINISTRIES

GOD'S LOVE MINISTRIES

### 3. சுதந்தரிப்பாய் நீயும் சுதந்தரிப்பாய்

சுதந்தரிப்பாய் நீயும் சுதந்தரிப்பாய்
தேசத்தை நீயும் சுதந்தரிப்பாய் - (2)
பாலும் தேனும் ஓடிடும் கானான்
வாழ்க்கையை நீயும் சுதந்தரிப்பாய் - (2)
- சுதந்தரிப்பாய்

உன்க்கெதிராக எழும்பிடும் ஆயுதம்
ஒருநாளும் வாய்க்காதே வாய்த்திடாதே
அதை நீ அறிவாய் கண்களால் காண்பாய்
தேவனை மகிமைப்படுத்திடுவாய் - (2)
- சுதந்தரிப்பாய்
சத்துரு உன்னை நெருங்கி விடாமல்
தலையை எண்ணையால் அபிஷேகித்தார் - (2)
சந்ததியை அவர் பெருகிடச் செய்வார்
உன்னதங்களிலே அமரச்செய்வார் - (2)
- சுதந்தரிப்பாய்
தாழ்மையில் கிடந்தேன் தனிமையில் தவித்தேன்
கிருபையாய் என்னையும் அணைத்தீரே
தோளில் சுமந்தீர் அன்பை பொழிந்தீர்
சிங்காசனத்தில் அமரச் செய்தீர் - (2)
- சுதந்தரிப்பாய்

### 4. கன்மலையே ஞானக் கன்மலையே

கன்மலையே ஞானக் கன்மலையே (2)
ஐங்காயம் ஏற்ற அன்பு கன்மலையே
எனக்காக அடிக்கப்பட்டீரே
இரத்தம் நதிகளாய் புரண்டு வந்ததே - (2)
இயேசுவே அந்த கன்மலை - (2)
- கன்மலையே

ஜீவநதியாய் பாய்ந்து வாருமே
ஜீவன் பெறவே உம்மை நாடினேன் - (2)
- எனக்காக அடிக்கப்பட்டீரே
ஆசீர்வாதத்தால் என்னை நிரப்பி
ஆவி வல்லமை தந்து மகிழ்கின்றீர் - (2)
- எனக்காக அடிக்கப்பட்டீரே
உலர்ந்த எலும்புகள் உயிரடையவே
பேரின்பத்தினால் என்னை நிறைத்தீரே - (2)
- எனக்காக அடிக்கப்பட்டீரே

GOD'S LOVE MINISTRIES

## 5. நீரில்லாத வாழ்வினிலே நிம்மதியில்லை

நீரில்லாத வாழ்வினிலே நிம்மதியில்லை
நீரில்லாத வாழ்வு வெறும் கானல் நீரே (2)
புரியவில்லை தேவா புரிந்தவரே வாராய் - (2)
- நீரில்லாத
மனிதனை நம்பி நம்பி மதிக்கெட்டு போனேன்
பேரிழந்த மரம்போல் மண்ணில் சாய்ந்தேன்
புரியவில்லை தேவா புரிந்தவரே வாராய் - (2)
- நீரில்லாத
பாவத்தை தண்ணீர்போல் பருகி நானும் பார்த்தேன்
பாலைவனமாக நானும் மாறிப்போனேன் - (2)
புரியவில்லை தேவா புரிந்தவரே வாராய் - (2)
- நீரில்லாத
வியாதியில் நான் விழுந்து மனம் நொந்து போனேன்
சோதனை சூழ்கையில் சோர்ந்தும் போனேன்
புரியவில்லை தேவா புரிந்தவரே வாராய் - (2)
- நீரில்லாத

## 6. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் தேவனே

துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் தேவனே
உம்மை என்றும் பணிந்து நாங்கள் போற்றுவோம் - (2)
போற்றுவோம் நாங்கள் போற்றுவோம்
உம்மை என்றும் பணிந்து நாங்கள் போற்றுவோம் - (2)

எதிரிகளின் சிதறி ஓடிடுவார் உம்மை துதிப்பதனால்
பயங்கள் மாறி வாழ்வினிலே முன்னேறி சென்றிடுவேன் (2)
துதிப்பேன் துதிப்பேன் உம்மைத் துதித்திடுவேன்
புகழ்வேன் புகழ்வேன் உம்மை புகழ்ந்திடுவேன்
- துதிகளில் மத்தியில்

தடைகள் யாவும் நீங்கீடுமே உம்மை துதிப்பதனால்
நினைத்ததை நானும் அடைந்திடுவேன் உந்தன் வல்லமையால் (2)
துதிப்பேன் துதிப்பேன் உம்மைத் துதித்திடுவேன்
புகழ்வேன் புகழ்வேன் உம்மை புகழ்ந்திடுவேன்
- துதிகளில் மத்தியில்

சூழ்நிலை எல்லாம் மாறிடுமே உம்மை துதிப்பதினால்
நன்மையின் ஈவை பெற்றிடுவேன் நன்றி சொல்லிடுவேன்
துதிப்பேன் துதிப்பேன் உம்மைத் துதித்திடுவேன்
புகழ்வேன் புகழ்வேன் உம்மை புகழ்ந்திடுவேன்
- துதிகளில் மத்தியில்

GOD'S LOVE MINISTRIES

## 7. சிலுவையின் நிழலிலே சாய்ந்திளைப்பாறிடு

சிலுவையின் நிழலிலே சாய்ந்திளைப்பாறிடு
உலக கவலைகளை மறந்திடுவாயே (2)
புதுபெலன் பெற்றிடுவாயே என் மகனே
புதுபெலன் பெற்றிடுவாயே (2)

சிலுவையே கோர சிலுவையே
உடையுதே உள்ளம் உடையுதே – (2)
– சிலுவையின்
பாவம் நிறைந்த உன் வாழ்வுதனை
பரிசுத்தமாக்கிட மரித்தாரே (2)
கடலைத்தேடும் நதியைப்போல
பாய்ந்தது இரத்தம் சிலுவையிலே –(2)
(சிலுவையிலே) – சிலுவையே
சாபம் நிறைந்த உன் வாழ்வுதனை
சர்வ வல்லவர் மீட்டாரே – (2)
சத்துரு உன்னை நெருங்கி விடாமல்
செந்நீர் இரத்தமாய் சிந்தினாரே – (2)
(சிந்தினாரே) – சிலுவையே
வியாதி நிறைந்த உன் வாழ்வுதனை
சுகம் பெலன் தந்து மீட்டாரே – (2)
பளுவாய் சிலுவை அழுத்தினதலே
பரனே தரையில் விழுந்தாரே – (2)
(விழுந்தாரே) – சிலுவையே

## 8. நான் உம்மை மறந்தாலும் நீர் என்னை மறப்பதில்லை

நான் உம்மை மறந்தாலும் நீர் என்னை மறப்பதில்லை
என் தெய்வமே என் இயேசுவே எவ்வளவன்பு வைத்தீர் – (2)
– நான் உம்மை
யோனாவைப் போல நான் இருந்தேன்
உம் தூய வார்த்தை மறுத்துவிட்டேன் – (2)
சேதம் என்றும் என்னை அணுகிடாமல்
நேசரே காத்ததுக் கொண்டீர்
– நான் உம்மை
பேதுரு போல பேசி வந்தீர்
அன்பராம் உம்மை மறுதலித்தேன் –(2)
உம்மை விட்டு நான் தூரப் போனேன்
உம் அன்பை இழந்து விட்டேன் – (2)
– நான் உம்மை
தகப்பன் தன் பிள்ளையை சுமப்பது போல
தயவாய் என்னை சுமந்து வந்தீர் – (2)
தத்தளிக்கும் என் வாழ்க்கையிலே
படகாய் நீர் இருந்தீர் – (2)
– நான் உம்மை

## 9. நன்றி சொல்வி பாட வந்தேன்

நன்றி சொல்வி பாட வந்தேன்
நல்லவராம் இயேசுவையே (2)
செய்த நன்மை ஆயிரங்கள்
சொல்லி சொல்லி பாடவந்தேன்

நன்றி ஐயா உமக்கு நன்றி ஐயா
- நன்றி சொல்லி

வேதனை பெருகும் போதும்
தள்ளாடி நடந்த போதும் - (2)
துதி பலி செலுத்த வைத்தீர்
அதிசயம் காணச் செய்தீர் - (2)
- நன்றி ஐயா

குப்பையில் இருந்த என்னை
கோபுரத்தில் ஏற்றி வைத்தீர் - (2)
எண்ணில்லா அதிசயங்கள்
என் வாழ்வில் செய்து வந்தீர் - (2)
- நன்றி ஐயா

நம்பிக்கை இழந்த போதும்
நம்பினோர் பகைத்த போதும் - (2)
என் வாழ்க்கைப் படகினிலே
என் இயேசு கூட இருந்தீர் - (2)
- நன்றி ஐயா

உலக ஆசை எல்லாம்
உதறி தள்ளி விட்டு
உயிருள்ள நாட்களெல்லாம்
உமக்காய் ஓட வைத்தீர் - (2)
- நன்றி ஐயா

## 10. மகிழ்ச்சியாயிருங்கள்

மகிழ்ச்சியாயிருங்கள் (4)
மன்னவன் இயேசு பிறந்தார்
நானிலம் மீட்டிட பிறந்தார் (2)
பிறந்தார் இயேசு பிறந்தார்
இயேசு பிறந்தார் இயேசு பிறந்தார் (2)

நெகிழப்பட்டு ஒடுக்கப்பட்டாய்
கைவிடப்பட்டு கலங்கி நின்றாய் - (2)
மீட்பர் உன்னை மீட்டெடுத்து
மீண்டும் கானம் பாட செய்தார் - (2)
அல்லேலூயா - (8)

GOD'S LOVE MINISTRIES

சோதனை உன்னை சூழ்ந்த போது
சோர்வின்றி நீ முன் நடந்தாய் - (2)
நேசர் உன்னை மீட்டெடுத்து
நேசமார்பில் அணைத்துக் கொண்டார் - (2)
அல்லேலூயா - (8)

பாவசேற்றில் நீ வீழ்ந்த போது
பாசம் இழந்து நீ தவித்த போது
மகிமை தேவன் மனமிரங்கி
மகிமையாய் உன்னை நடத்தி சென்றார் - (2)
அல்லேலூயா - (8)
-மகிழ்ச்சியாயிருங்கள்

GOD'S LOVE MINISTRIES